திரு. எ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இந்த செமஸ்டர் சிஸ்டத்தில் இருக்கிற இன்டர்னல் அசெஸ்மென்ட் முறையை எதிர்த்து சட்டக்கல்லூரி மாணவர்கள் போராடினார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது வழக்கு இருக்கிறது. இப்போது சட்டக் கல்லூரி தேர்வு நடைபெற இருக்கிறது. வழக்கு இன்னும் முடியாமல் இருப்பதால் கைதானவர்கள் தேர்வு எழுத முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, சட்டக்கல்லூரி மாணவர்கள் மீது இருக்கிற வழக்கை திரும்பப்பெற்றுக் கொண்டு, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர்களே, வழக்குப் போட்டிருப்பது சட்டக்கல்லூரி மாணவர்களைத் தண்டிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அல்ல என்பதை வழக்கறிஞரான உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வன்முறை சம்பவங்கள் மீண்டும் உருவாகாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தேர்வு எழுத சங்கடங்கள் இருந்தால் நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி, வாய்தா பெற்றுக் கொள்ளலாம்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன நன்மை இருக்கிறது என்று அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர்களே, இந்த சிஸ்டம் இல்லாதபோது தேறிய மாணவர்களின் எண்ணிக்கையை விட இந்த முறை புகுத்தப்பட்ட பிறகு அதிகமான மாணவர்கள் தேறுவதே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பலன் அளிப்பதாக அதாவது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதிகமாக தேறுவதாக இந்த அரசு எடுத்துக் கொள்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினை குறித்த தகவல்.

*வினா 497—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து 1977 ஜூலை மாதத்தில் கடிதம் ஏதேனும் வந்துள்ளதா?

1978 மார்ச் 10

(ஆ) ஆம் எனில், அந்தக் கடிதத்தின் நகல் ஒன்று இந்த அவைமுன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இவ்வினாவிற்குப் பதிலளிப்பது. பொது நலனுக்கு ஒவ்வாது என்பதால் இவ்வினாவிற்குப் பதிலளிக்க இயலாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று அவ்வப்போது அறிவிக்கப்பட்டு வந்தாலும் இந்தி ஒரு கால கட்டத்தில் கட்டாயமாக ஆட்சி மொழியாக ஆகும் என்ற கருத்தை மத்திய அரசிலே தெரிவிக்கிறார்களே, இது மறைமுகமாக இந்தியைத் திணிக்கும் ஒரு நடவடிக்கையாக அமைகிறது. எனவே இந்தித் திணிப்பைத் தடுக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசை வற்புறுத்தி ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கும் என்று ஒரு தீர்மானம் போட்டு இங்கிருந்து மத்திய அரசிற்கு அனுப்ப முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கட்டாய இந்தித் திணிப்புக்கு இங்கே எந்த அளவுக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை மத்திய அரசு உணரும். ஆகவே தான் கட்டாயமாக இந்தி திணிக்கப்பட மாட்டாது என்கிற உறுதி மொழியை அவர்கள் அவ்வப்போது தந்து வருகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் வழங்கிய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பது பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று குறிப்பிட்டார்கள். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. பொது நலனுக்கு உகந்ததாக இருக்காது என்ற ஒரு கேள்வியை தங்களது அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையில் இந்த அவையில் அனுமதித்தது சரிதானா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை அனுமதித்தேன். ஆனால் சில தகவல்களைத் தரக் கூடாது என்று அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய கொள்கையில் நான் நுழைய முடியாது. பதில் சொல்கிற நேரத்தில் அரசாங்கத்தின் நிலைமையை உணர்ந்து அல்லது வெளியே சொல்லக் கூடாது என்று கருதி

[1978 மார்ச் 10

அமைச்சரவர்கள் சொல்லாமல் இருக்கும்போது அது என்னுடைய குற்றம் அல்ல. அது அவருடைய விருப்பத்தைப் பொறுத்தது; நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, உறுப்பினர்கள் கொடுக்கின்ற கேள்விகளைத் தாங்கள் செயலாளர் மூலம் ஆராய்ந்து பார்த்து அவைகளைத் தேர்ந்தெடுத்து கேள்விப் பட்டியல் தயார் செய்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்படவில்லையானால் அதற்கான காரணங்களை உறுப்பினர்களுக்கு அறிவிக்கிறீர்கள். ஆகவே, அப்படி தாங்கள் அந்தக் காரணத்தை அறிவிக்காததால் இது பொது நன்மைக்கு உகந்த ஒன்றுதான் என்று தாங்கள் நினைப்பதாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேரவைத் தலைவரை இக்கட்டான நிலைக்குக் கொண்டு வருகிறார்கள். நான் அனுமதித்தது அது தேவையான ஒன்று என்று தான். ஆனால் அமைச்சரவர்கள் அவர்களுக்கு இருக்கக் கூடிய கொள்கைப்படி, . . . என்னைப்படி விடையை வெளிப் படுத்துவது நல்லதல்ல என்று கூறுவார்களேயானால் அதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. இதைப் போய் பெரிய பிரச்சினை யாகக் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest.'

என்று விதி 39-ல் கூறப்பட்டிருக்கிறது. பப்ளிக் இண்டரஸ்ட்க்கு உகந்ததல்ல என்று அமைச்சரவர்கள் பதில் சொல்ல மறுக்கலாம். என்னுடைய கருத்து கேள்வியை அனுமதிக்கலாம் என்பதே.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, துணைக் கேள்வி கேட்டு இப்படிப்பட்ட நிலைமை எழுமேயானால் பொது நன்மைக்கு உகந்ததல்ல என்ற அளவில் அமைச்சரவர்கள் பதில் கூறுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் மூலக் கேள்வியை தாங்கள் அனுமதித்துவிட்ட பிறகு பொது நன்மைக்கு உகந்ததல்ல என்று சொல்வது சபாநாயகர் இந்தக் கேள்வியை அனுமதித்ததன் மீது அமைச்சரவர்கள் களங்கம் கற்பிப்பதுபோல் அமைந்து விடாதா—அமைந்து விட்டது என்று நான் சொல்லவில்லை— அமைந்துவிடாதா என்ற ஐயத்தைத் தான் எழுப்புகிறேன்.

1978 மார்ச் 10]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, மேல் சபையில் இதே போன்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதே போன்ற ஒரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இங்கே கேட்ட பிறகு அது எடுத்துக் கொள்ளப்பட்ட நேரத்தில் அங்கே சொன்ன பதிலையே இங்கேயும் நான் சொல்வதில் தவறு இல்லை என்று கருதித்தான் சொல்லி இருக்கிறேன்.

[முற்பகல் 9.50]

திரு. என். சங்கரய்யா: இந்தப் பிரச்னைப்பற்றி இவ்வளவு தூரம் வந்ததற்குப் பிறகு இதுபற்றி அரசாங்கம் அறிவிப்பதுதான் பொதுநலனுக்கு நன்மையாக இருக்கும், அப்படி அறிவிக்காது போனால் இதில் ஏதோ மர்மம் இருப்பதாக பொதுமக்கள் மத்தியில் ஒரு எண்ணம் ஏற்படும். இதை தங்கள் மூலம் அவர்களது கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியின் மூலப்பொருள் எல்லோரும் உணர்ந்த ஒன்றுதான். அதைத் தெரிவிக்காமல் இருப்பது நல்லது என்று சொன்னார்களே தவிர இதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அமைச்சர் அவர்களின் பதிலில் அந்தக் கடிதத்தில் மொழிபற்றி ஒன்றும் பிரதமர் எழுதவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. மேல்சபையில் சொல்லப்பட்டது, மொழிப் பிரச்னைப்பற்றி கடிதம் எழுதவில்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மொழிபற்றி, அப்பிரச்சினை பற்றி அதில் இல்லை என்று சொன்னால் பிரச்னை தீர்ந்துவிடும். எனவே, அதுபற்றி அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆகவே, ஒவ்வொன்றாகக் கேட்க முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். எப்படிக் கேட்டாலும் அதே பதில்தான், தெரிவிக்க இயலாது.